

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, குமிழியம் ஊராட்சியில், குமிழியம் முதல் ஜமீன்தத்தனூர் வரை தார் சாலை அமைக்கும் பணியினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

### தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க. பவள விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வோம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!



புதுக்கோட்டை, செப். 27 - புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க. பவள விழாவை முன்னிட்டு நாளை (28.09.2024 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி திடலில் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், பேரூராட்சி மன்றத் தலைவர்கள். ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள். மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளை கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி. வழக்கறிஞர் அணி, விவசாய அணி. விவசாய தொழிலாளர் அணி. இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி. மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி. வர்த்தகர் அணி ஆதி திராவிடர் நலக்குழு அணி. சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் நச்சுக்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பிஎல்ஏ). பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பிஎல்சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### தி.மு.க.கூட்டணிக் கட்சி தலைவர்கள் பங்கேற்கும் தி.மு.க.பவள விழா மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு

# பெரம்பலூர் மாவட்ட தி.மு.க.வினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்!

## தி.மு.க. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!



பெரம்பலூர், செப். 27 - பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.க.பவள விழாவை முன்னிட்டு 28.09.2024, சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணியளவில், காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி திடலில் தி.மு.க.கூட்டணிக் கட்சி தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார். அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### 'புதிய தலைமுறை' தொலைக்காட்சி

# புதுச்சேரி செய்தியாளர் அப்துல் ரகுமான் மறைவு!

## சென்னை நிருபர்கள் சங்கம் இரங்கல்!

புதுச்சேரி, செப். 27 - புதிய தலைமுறை தொலைக்காட்சியில் 2011 ஆம் ஆண்டு புதுச்சேரியின் செய்தியாளராக சேர்ந்த அப்துல் ரகுமான் நேற்று காலமானார். 54 வயதாகும் அவர், உடல் நலம் சரியில்லாமல் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று காலை மரணம் அடைந்தார்.

தொடர்ந்து 14 ஆண்டுகள் புதுச்சேரியின் செய்தியாளராக சிறப்பாக பணியாற்றி வந்தார். பல்வேறு சமூக பிரச்சனைகளை செய்தியாக சேகரித்து அதற்கு தீர்வும் கண்டுள்ளார். குறிப்பாக நெடுந்தூர பயணத்தின் போது அரசு பேருந்துகள் நெடுஞ்சாலையோரம் உள்ள உணவகங்களில் நிறுத்துவதால் அந்த உணவகங்களினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்பு, அதிகப்படியான விலை உள்ளிட்ட பிரச்சினைகளை எடுத்துக் கூறியதால், தமிழ்நாடு முழுவதும் நெடுஞ்சாலை ஓர உணவகங்களில் விலைப்பட்டியல் மற்றும் சுகாதாரத்தை கடைப்பிடிக்க உயர் நீதி மன்றம் ஒரு உத்தரவை பிறப்பித்தது;

இதேபோல் புதுச்சேரியின் பல்வேறு பிரச்சனைகள் குறிப்பாக பாதாள சாக்கடைகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள் அதனை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று அதற்கு தீர்வு ஏற்படுத்தி, தானே புயல் உள்ளிட்ட பல்வேறு மழைக்காலங்களில் மக்களுக்கு ஏற்படும் துயரங்களை உடனுக்குடன் அரசுக்கு தெரியப்படுத்தி தீர்வு கண்டார்.

முகநூல் விரும்பியாக இருந்த அப்துல் ரகுமானை அவர் போடும் பதிவிற்காக அவரை பின் தொடர்வோர்களின் எண்ணிக்கையும் அதிகம்.

அவருக்கு மனைவி மும்தாஜ் (52), மூன்று மகன்கள், ஒரு மகள் உள்ளனர்.

பணியில் இருக்கும் போது இருந்ததினால், அவர் குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க வேண்டும் என்று சென்னை நிருபர்கள் சங்கம் (மெட்ராஸ் ரிப்போர்டர்ஸ் கில்ட்) புதுச்சேரி அரசைக் கேட்டு கொள்கிறது என்று சென்னை நிருபர்கள் சங்கத் தலைவர் ஆர்.ரெங்கராஜ், செயலாளர் டி.சேகர் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.





நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை தலைமையில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொண்டு பல்வேறு துறைகளின் சார்பில் 12 பயனாளிகளுக்கு ரூ.92.27 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் பொதுக் கணக்குக் குழுத்தலைவர் கு.செல்வபெருந்தகை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் குழு உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, கோ.ஐயப்பன், எஸ்.சந்திரன், டாக்டர் சி.சரஸ்வதி, எஸ்.சேகர், கே.ஆர்.ஜெயராம், மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் து.கலாநிதி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



தாட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (25.9.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர்கள் மற்றும் பழங்குடியினர் திட்ட அலுவலர்களுடன் துறை தொடர்பான நலத் திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் சட்டமன்ற பேரவை அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசுச் செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நல இயக்குநர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குநர் ச.அண்ணாதுரை, உயர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

அரியலூர், செப். 27 - அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் சாலைகள் அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்தல், பள்ளி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதுல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் ரூ.5.43 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர்

சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

அதன்படி, செந்துறை ஒன்றியம், கட்டையன்குடிகாடு கிராமத்தில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.16.75 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். பின்னர், செந்துறையில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடையினை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கி விற்பனையினை தொடங்கி வைத்தார். தொடர்ந்து செந்துறையில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர், செந்துறை இருளர் காலனியில் அயோத்திதாச பண்டிதர் திட்டத்தின் கீழ் முதல் தெருவில் ரூ.4.96 இலட்சம் மதிப்பீட்டிலும், இருளர் காலனி இரண்டாவது தெருவில் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிலும், இருளர் காலனி மூன்றாவது தெருவில் ரூ.4.15 இலட்சம் மதிப்பீட்டிலும், இருளர் காலனி நான்காவது தெருவில் ரூ.3.84 இலட்சம் மதிப்பீட்டிலும், இருளர் காலனி ஐந்தாவது தெருவில் ரூ.3.41 இலட்சம் மதிப்பீட்டிலும் சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணியினை துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சேடக்குடிகாடு கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, பொதுமக்களுக்குப் பொருட்களை வழங்கி விற்பனையினை தொடங்கி வைத்தார். பின்னர், உஞ்சினி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.8.04 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். தொடர்ந்து உஞ்சனி ஊராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்ட த்தின் கீழ் ரூ.12 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடையினை திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பொருட்களை வழங்கி விற்பனையினை தொடங்கி வைத்தார். அதன் பின்னர், உஞ்சினி ஊராட்சியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் உஞ்சினி2 உணவு தானிய சேமிப்பு கிடங்கு (பொது விநியோக கடை) கட்டடம் கட்டும் பணியினை துவக்கி வைத்தார். தொடர்ந்து உஞ்சினி ஊராட்சியில், ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர், இரும்புலிக்குறிச்சி ஊராட்சியில், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.89.64 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புலிக்குறிச்சி பிலாக் குறிச்சி சாலை முதல் செதலவாடி வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், தொடர்ந்து இரும்புலிக்குறிச்சி ஊராட்சியில் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் இரும்புலிக்குறிச்சி 1 உணவு தானிய சேமிப்பு கிடங்கு (பொது விநியோக கடை) கட்டடம் கட்டும் பணியினையும், இரும்புலிக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.1.69 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியினையும் துவக்கி வைத்து, பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, குமிழியம் ஊராட்சியில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.148.62 இலட்சம் மதிப்பீட்டில் குமிழியம் முதல் ஜமீன்தத்தனூர் வரை தார்ச் சாலை அமைக்கும் பணியினையும், பின்னர், பாளையக்குடி கிராமத்தில் முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.137.74 இலட்சம் மதிப்பீட்டில் பாளையக்குடி முதல் சவருக்காடு வரை தார் சாலை அமைக்கும் பணியினையும், அதனைத் தொடர்ந்து, பெரிய ஆனந்தவாடி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும், பின்னர் சின்ன ஆனந்தவாடி கிராமத்தில் சிறுகனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் நிதியின் கிழ் ரூ.9.50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி என மொத்தம் ரூ.5.43 கோடி மதிப்பீட்டிலான பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.கவிதா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர் உசைன், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆதி.இளங்கோவன், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சர்புதீன், செல்வம், ராமராஜன், மாரிமுத்து, தர்மராஜ், கழக நிர்வாகிகள் பழனிவேல், அண்ணாதுரை, ரமணி, ஆனந்த், சுந்தர், இலக்கியா, சித்ரா, மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் இதர அரசு அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணியின் மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் திராவிட முன்னேற்ற கழக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும் கழக இளைஞரணி செயலாளரும் விளையாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு திராவிட முன்னேற்ற கழகத்தின் அயலக அணியினர் மாநில நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் சென்னை கோயம்பேட்டில் உள்ள ஜே.பி. ஓட்டலில் கழக அயலக அணித்தலைவரும் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினரும் கழக அயலக அணியின் மாநில செயலாளருமான எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் கழக அயலக அணியின் இணை செயலாளர்கள் எஸ்.செந்தில்குமார், வழக்கறிஞர்கள் பி.புகழ் காந்தி, மனுராஜ் சண்முக சுந்தரம், கழக அயலக துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி, சே.உமாராணி, விஜயன் ராமகிருஷ்ணன், கன்னிகை ஸ்டாலின், முத்துவேல் ராமசாமி, சேகர் ஜெ.மனோகரன், குமரி பாபு வினிபிரட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, அறிவிப்பின்கீழ்,தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி வழிகாட்டுதலுடன்,கழக மாநில மாணவரணி சார்பாக தர்மபுரி கிழக்கு மாவட்டத்தில் மாநில அளவில் முதல் முறையாக தர்மபுரி கிழக்கு மாவட்ட கழக மாணவரணி அமைப்பாளர் என்.பி. பெரியண்ணன் ஏற்பாட்டில் நல்லம்பள்ளி மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட இண்டூர் ஊராட்சி நத்த அள்ளி பகுதியில் உள்ள சென்றாய பெருமாள் கல்வியில் கல்லூரியில், தமிழ் மாணவர் மன்றம் (TSC) உருவாக்கி கல்லூரியில் தமிழ் மாணவர் மன்ற கொடியினை மாணவரணி மாநில துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன் ஏற்றி வைத்து கல்லூரி மாணவர் அணி மன்ற உறுப்பினர் படிவம் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார். உடன் மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் கௌதம், வேடியப்பன், அன்பரசு, ஐ.டி.விங் எம்.பி.கௌதம் மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.